22.01.2025

அ.வ.எண். 35/2022

வாசா.1 - கருப்பசாமி

<u>9 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னிடம் காட்டப்படுவது நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தின் நகல் என்றால் ஆமாம். அதில் உள்ள சங்கதிகள் நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் ஆமாம். நான் பிரமாண வாக்குமூலத்தில் நஞ்சப்ப பண்ணாடியின் வாரிசுகள் 1 முதல் 7 வாதிகள் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நாங்கள்ட நஞ்சப்ப பண்ணாடியின் பேரன்கள் ஆவோம். நேரடி வாரிசு கிடையாது. நஞ்சப்ப பண்ணாடிக்கு 4 ஆண் மக்கள், 3 பெண் மக்கள். இந்த 7 குடும்பத்திலும் மூத்தவர்கள் தான் இந்த வழக்கின் வாதிகள், மற்ற நபர்கள் வழக்கில் சேர்க்கப்படவில்லை. இந்த 7 நபர்களை தவிர அவர்களுடைய உடன் பிறந்தவர்களுக்கும் வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என்று நான் சொல்கிறேன் என்றால் ஆமாம். இந்த வழக்கு தாக்கல் செய்த போது அனைத்து வாரிசுகளுக்கும் 18 வயது நிறைவடைந்துவிட்டது என்றால் ஆமாம்.

எங்கள் 7 நபர்களை தவிர மற்றவர்கள் வழக்கு சொத்தை பொறுத்து உரிமையை எங்களுக்கு எழுத்துபூர்வமாக எதுவும் எழுதி கொடுக்கவில்லை. என்னுடைய குடும்பத்தில் மூத்தவர் சொன்னால் மற்றவர்கள் கேட்டு கொள்ள வேண்டும் என்றால் ஆமாம். அதன்படி தொன்றுதொட்டு இந்த நடைமுறை கடைபிடிக்கப்படுகிறதா என்றால் ஆமாம். 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது அவர்கள் செய்த உட்பிரிவு தவறு என்றும், அதன் பின்னிட்டு ஏற்படுத்திய ஆவணங்கள் தவறு என்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். நஞ்சப்ப பண்ணாடி சொத்து பொறுத்து எங்களது குடும்பத்திற்குள் இதுவரை பாகப்பிரிவினையோ வேறு எந்த எழுத்துபூர்வ ஆவணமோ ஏற்படுத்தவில்லை. நஞ்சப்ப பண்ணாடிக்கு வழக்கு சொத்து தவிர வேறு சொத்துக்களும் உள்ளது. மற்ற சொத்துக்களை பொறுத்தும் மற்ற வாரிசுகள் எந்த ஏற்பாடும் எங்களுக்கு செய்து கொடுக்கவில்லை என்று

வழக்கில் நான் சொல்லவில்லை. வழக்கு சொத்தில் எங்களது குடும்பத்தார் 67 வருடமாக அனுபவத்தில் இருந்து வருகிறோம் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம், தற்போது 78 வருடமாக நாங்கள் தான் அனுபவத்தில் இருக்கிறோம். நான் சின்னவேடம்பட்டியில் குடியிருக்கிறேன். நான் இருக்கும் இடத்திற்கும், வழக்கு சொத்திற்கும் சுமார் 23 கி.மீ தூரம் இருக்கும்.

வழக்கு சொத்தில் என்ன நடந்தாலும் ஒரு வாதிக்கு தெரிந்தால் மற்றவர்களுக்கும் அது தெரியும் என்றால் ஆமாம். வாதிகளின் வழக்கு சொத்திற்கு அருகாமையில் சபாபதி குடியிருக்கிறார். வழக்கு சொத்தில் இயற்கை அமைப்புகளில் மாற்றம் எதுவும் யாராவது செய்தால் எங்களுக்கு அது உடனடியாக தெரியவரும் என்றால் ஆமாம். அதேபோல் ஆவணப்பதிவு எதுவும் ஏற்பட்டால் அது எங்களுக்கு தெரியவந்திருக்கும் என்றால் இல்லை. வழக்கு சொத்து தற்போது காலியிடமாக தான் உள்ளது, கட்டிடங்கள் எதுவும் இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலம் பத்தி 12 ல், 4ம் பிரதிவாதி சுமதி பற்றி சொல்லியுள்ளேன் என்றால் அதன் அடிப்படையில் தான் அவருக்கு எதிராக பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் ஆமாம். 4ம் பிரதிவாதி சுமதி 2007 ல் அவரது தகப்பனாருடன் சேர்ந்து ஒரு கிரயப் பத்திரம் ஏற்படுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்.

4ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தில் 23.5 சென்ட் பாத்தியம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். 2007 ம் ஆண்டு சுமதி ஏற்படுத்திய ஆவணம் எப்போது எனக்கு தெரிய வந்தது என்று என்னுடைய வழக்குரையிலும், சாட்சிய வாக்குமூலத்திலும் நான் சொல்லவில்லை. உட்பிரிவு சம்மந்தமாக நான் 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது வருவாய்துறை நீதிமன்றத்தில் மனு கொடுத்து வழக்கு நிலுவையில் உள்ளது. சுமதி பெயரில் உள்ள 2007 கிரய பத்திரத்தை பொறுத்து இந்த வழக்கு தவிர வேறு எந்த நடவடிக்கையும் முன்னறிவிப்பும் நான் கொடுக்கவில்லை. 2007 ல் ஏற்பட்ட கிரய பத்திரத்தை 3 வருடத்திற்குள் கேள்வி எழுப்பியிருக்க வேண்டும் என்றும், 2022 ல் அந்த ஆவணத்தை செல்லாது என்று பரிகாரம் கேட்பது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. வழக்கு சொத்தை சரியாக மதிப்பீடு செய்யாமல் குறைவான நீதிமன்ற முத்திரை கட்டணம் செலுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. நஞ்சப்ப பண்ணாடியின் பெண் மக்களுக்கு திருமணம் செய்து கொடுக்கும்போது வழக்கு சொத்து பொறுத்து எந்த ஏற்பாடும் அவர்கள் செய்து கொடுக்கவில்லை. சீர்வரிசை வழக்கம் போல் செய்வது தான். 4ம் பிரதிவாதியின் தகப்பனார் நடராஜன் தான் எங்களில் இளையவர். அவர், அவரது சகோதரிகளுக்கு நல்ல முறையில் சீர் வரிசை செய்ததால் தான் 4 ல் 1 பங்கு சொத்தை கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியின் தகப்பனார் நடராஜன் 5ம் பிரதிவாதிக்கு செய்து கொடுத்த கிரய பத்திரம் சட்டப்படி செல்லும் என்றும் என்னுடைய வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/கருப்பசாமி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur